55—

சேமிப்புக் கிடங்கு

***4839—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியில் சேமிப்புக் கிடங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, எடமணல் கிராமத்தில் 9.45 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தில் ரூ.58.75 கோடி மதிப்பீட்டில், தலா 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 8 கிடங்குகள், மொத்தம் 40,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் கட்டுவதற்குரிய பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலில் நடைபெறுகின்ற இவ்வரசால், காவேரியினுடைய கடைமடைப் பகுதியாக இருக்கின்ற எங்கள் தொகுதி விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான இந்த சேமிப்புக் கிடங்கு, இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்பதை அறிகின்ற நேரத்தில், நாங்கள் மிகுந்த நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால், Open Godown, திறந்தவெளி

2017 மார்ச் 21]

சேமிப்புக் கிடங்கில் நெல்மணிகள் சேமிக்கப்படுவதால், மிகுந்த பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. கடற்கரை சார்ந்த எங்கள் தொகுதியில், புயல் வெள்ளக் காலங்களில் விவசாயிகள் மிகுந்த பாதிப்பிற்குள்ளானார்கள். அரசிற்கும் பெரும் இழப்பு ஏற்பட்டது. தற்போது நல்ல செய்தியை, இந்த அவையில் அறிவித்த மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக இருக்கிற ஆத்தூரில், ஏறத்தாழ 2,500 ஏக்கருக்கும் மேலாக நெல் விளைச்சல் இரண்டு போகம் விளைகின்றன. இந்த ஆண்டு விளைச்சல் இல்லாமல் இருந்தாலும், கடந்த 10 ஆண்டுகாலமாக அங்கே நெல் கொள்முதல் நிலையம் இல்லாத காரணத்தால், அறுவடை செய்கின்ற காலங்களில், மழை பெய்கின்ற காலங்களில், அந்த நெல் மூட்டைகள் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகி, விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, திண்டுக்கல் மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக இருக்கின்ற ஆத்தூரில் ஒரு நெல் கொள்முதல் நிலையம் மற்றும் சேமிப்புக் கிடங்கு ஆகிய இரண்டையும் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் செய்யப்படும் உணவு தானியங்களைப் பாதுகாப்பாகச் சேமித்து வைத்து, பொது மக்களுக்கு விநியோகம் செய்யவேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு அதனை வலியுறுத்தி, 2011 ஆம் ஆண்டில் 12 இலட்சம் மெட்ரிக் டன்னாக மட்டுமே இருந்த கிடங்கின் கொள்ளளவை, 21 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்திய தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம்,

ஆத்தூர் பகுதியில் கிடங்குகளை ஒட்டிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நெல் கொள்முதல் ஆகும் என்று சொன்னால், ஆய்வு செய்து உடனடியாக நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதனையும், தேவைக்கேற்ப அந்த மாவட்டத்தில் உடனடியாக கிடங்கு அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அதனைச் செயல்படுத்தும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

நவீன சாயப்பட்டறைப் பிரிவு

***7112—திரு. இ. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டியில் நவீன சாயப்பட்டறைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டி பகுதியில் நவீன சாயப்பட்டறை அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னாளப்பட்டியில் நவீன சாயப்பட்டறை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.